UNGA

ஒருங்கிணைந்த புதிய தலைமுறை
UNIONE DELLA NUOVA GENERAZIONE
Via Pastrengo N°6 – 42100 Reggio Emilia - Italy
C.F.: 91138190359 Cell: 329/8890921 – unga2007@libero.it

N°_2008/pub20

*UNG ASSOCIAZIONE * UNG ACCADEMIA * UNG AMBULATORIO * UNG ASSISTENZA * UNG ARTISTICA * UNG ATLETICA *

# இத்தாலியில் தொழில் புரிவோருக்கு இத்தாலியரசினால் விடப்படும் புதிய நடைமுறைச்சட்டம் வேலையில் இருந்து விலகுவது தொடர்பாக DIMISSIONI VOLONTARIE

05–03–2008 ல் இருந்து தொழிலாளர்கள் தொழிலகத்தில் இருந்து, வேலையினை நிறுத்திக்கொள்ள முனைந்தால், அவர்கள் "கட்டாயமாக" அதற்கான விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். இது தொடர்பாக, ( www.lavoro.gov.it/mdv ) இவ் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

## விண்ணப்பத்தில் பிரயோகிக்க வேண்டியன

- தொழிலாளியின் விபரங்கள் முறையே
- விசாதொடர்பான விபர இலக்கங்கள்
- அலுவலகத்தின் தகவல்கள்
- தொழில் ஆரம்பித்த திகதி
- முன்னறிவித்தல் திகதி
- வேலை நிறுத்தத்திற்கும் முன்னறிவித்தல் திகதிக்கும் இடைப்பட்ட காலம்

தகவல்கள் on-line Ministero del Lavoroவால் அனுப்பப்பட்டவை

நிரப்பப்பட்ட விண்ணப்பப் பிரதி ஒன்று on line மூலம் திருப்பித்தரப்படும் அதனை 15 நாட்களுக்குள் தொழில் வழங்குனரிடம் ஒப்படைக்க வேண்டும்.

தொழிலாளர், பதிவுத்தபால் மற்றும் பெற்றதற்கான அத்தாட்சி முறை மூலம் அல்லது நேரடியாகவோ தொழில் வழங்குனருக்கு இப்பிரதியினை சேர்க்க முடியும். இவ்வேளையில் ஒப்படைக்கப்பட்டதற்கான அத்தாட்சி ஒப்பத்தையுடைய பிரதி ஒன்றைத் தொழிலாளர் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தொழில் அமைச்சால் வெளியிடப்பட்ட விண்ணப்பத்தைத்தவிர வேறு படிவங்களோ அல்லது வேறு விண்ணப்பங்களோ செல்லுபடியாகாது.

## யார் விண்ணப்பத்தை நிரப்பமுடியும்

- தொழிலாளர், அலுவலகர், வீட்டுவேலை, குடும்ப பார்வையாளர், நிரந்தர வேலையுடைய அதிகாரிகள்,
- பகுதி வேலைபுரிவோர் பயிற்சித்தொழிலாளர் (வேலையின் ஒப்பந்தக்காலம் முடிவதற்குள்) நிறுத்திக்கொள்ளலாம்.
- திட்டமிட்ட ஒப்பந்தத் தொழிலாளர், உதவித் தொழிலாளர்கள்
- அமைப்புகளில் பங்குகொள்வோர்
- பங்குதாரர்கள்

## யார் விண்ணப்பத்தை நிரப்பமுடியாது

- பரிட்சாத்தத்தொழிலாளர்
- ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளவிருக்கும் தொழிலாளர்

## எங்கு விண்ணப்பத்தை நிரப்பமுடியும்

- **Centro per l'Impiego**
- **Direzione Provinciale del Lavoro**
- **Comune**
- **Sindacato o Patronato (CGIL)**
- கணனித் தொடர்பு இருப்பவர்கள் தன்னிச்சையாக

தொழில் நிறுத்தத்திற்கான எண்ணமிருப்போர், விண்ணப்பிக்கும் முன்னர் Sindacato (CGIL) அல்லது தொழில்நிலையத்தில் தெரிவுசெய்யப்பட்டவருடன் (delegati) விண்ணப்பிக்கவேண்டிய காலம் மற்றும் அதுதொடர்பான விடயங்களை அறிந்து கொள்ளவும்.

## கவனத்திற்கு

விண்ணப்பிக்கும் நிகழ் ஆண்டு காலத்தில் திருமணம் அல்லது மகப்பேறு நிகழுமாயின் (ஒருவயதிற்கு உட்பட்ட குழந்தையின் பாதுகாப்புக் கருதி) இத்தகையோர் Direzione Provinciale del Lavoro மட்டும் பதிந்து தொழிலகத்தில் பிரதியினைச் சேர்க்க வேண்டும்.

எமது ஆலோசனையாக கையொப்பமிடும் முன் சந்தேகத்துக்குரியதாக இருந்தால் Sindacato வுடன் தொடர்புகொண்டு நிரப்பப்பட்ட பத்திரத்தில் என்ன எழுதப்பட்டுள்ளது என தெரிந்து கொள்ளவும்.

இது தொடர்பான சகல விபரங்களுக்கும் எமது UNGA அல்லது TNGA அமைப்பைத் தொடர்பு கொள்ளவும்.